பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
06 10 2024 **SUNDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்திய விமானப் படையின் 92வது ஆண்டு தினத்தை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் விமான சாகச நிகழ்ச்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

2. ஜம்மு காஷ்மீர், ஹரியானா சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ள மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

3. மஹாராஷ்ட்ரா மாநிலம், மும்பையின் செம்பூர் பகுதியில் இன்று காலை ஏற்பட்ட தீ விபத்தில் 3 குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

4. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பினரின் ராணுவத் தளவாடங்கள் வைக்கப்பட்டுள்ள இடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் திரு.பெஞ்சமின் நேத்தன் யாஹூ தெரிவித்துள்ளார்.

5. ஹங்கேரியில் நடைபெற்று வரும் உலக சேலஞ்ச் கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியின் இறுதியாட்டத்திற்கு இந்திய வீரர் யோகேஸ்வர் முன்னேறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>>>>

இந்திய விமானப் படையின் 92வது ஆண்டு தினத்தை முன்னிட்டு, விமான சாகச நிகழ்ச்சிகள் சென்னை மெரினா கடற்கரையில் இன்று காலை 11 மணிக்கு தொடங்கியது.

தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த சாகச நிகழ்ச்சியை காண்பதற்காக, சென்னை மெரினா கடற்கரை முதல் கோவளம் வரையிலான பகுதிகளில் லட்சக்கணக்கானோர் குவிந்துள்ளனர்.

21 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறும் இந்த நிகழ்ச்சியை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மாநில அமைச்சர்கள், இந்திய விமானப்படை முதன்மை ஏர் கமோடோர் அமர்ப்ரீத் சிங் மற்றும் முப்படைகளின் உயரதிகாரிகள், சென்னை மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மேடையில் அமர்ந்து பார்வையிட்டு வருகின்றனர்.

இந்த சாகச நிகழ்ச்சியில் இந்திய விமானப் படையின் **Chetak, Rafale, Dakota, Harvard, MIG, Poseidon-31, Herculus** ரக விமானங்களும், ஜாகுவார், தேஜஸ், சுகோய் 30 ரக விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பாண்டியன், சரங், மகாபலி, சூரியகிரண் உள்ளிட்ட சாகசங்களை போர் விமானங்கள் நிகழ்த்தி வருகின்றன.

போர் வீரர்கள் ஹெலிகாப்டரிலிருந்து இறங்கி பயங்கரவாதிகள் பதுங்கியுள்ள இடங்களை தகர்த்து, அவர்களை முறியடிப்பது தொடர்பான செயல்விளக்கமும் இந்த சாகச நிகழ்ச்சியில் செய்து காண்பிக்கப்பட்டது.

விமான சாகச நிகழ்வுகளுக்கு பல்லவா, காவிரி, காஞ்சி, நட்ராஜ், நீலகிரி, கார்த்திகேயா, தனுஷ், மெரினா, சோழா உள்ளிட்ட பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன.

ரபேல் விமானம் செய்யும் சாகசத்திற்கு புயல் என்றும், இலகு ரக ஹெலிகாப்டர் நடத்தும் அணிவகுப்புக்கு சங்கம் என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்திய கடலோர காவல்படையின் போர்க்கப்பல்களும் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டுள்ளன.

கடற்படை வீரர்களும் சாகச நிகழ்ச்சியில் ஈடுபட்டனர்.

சாகச நிகழ்ச்சிகளை கண்டுகளித்து வரும் பொதுமக்கள், சென்னையில் இதுபோன்ற நிகழ்ச்சியை காண்பது தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக கூறியுள்ளனர்.

(சவுண்ட் பைட் - பொதுமக்கள் 50 நிமிடம்)

சென்னை மெரினா கடற்கரை சாலையில் மக்கள் போக்குவரத்துக்கு வசதிக்காக, வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

பிற்பகல் 1 மணியளவில் சாகச நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றதும், மீண்டும் போக்குவரத்து சரி செய்யப்படும் என்று காவல்துறை கூறியுள்ளது.

சுமார் எட்டாயிரம் காவலர்கள் இதற்கான பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

<<<<<<<<>>>>>>>>>>

ஜம்மு காஷ்மீர், ஹரியானா சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளை மறுநாள் நடைபெறவுள்ள நிலையில், வாக்கு எண்ணப்படும் மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்கு எண்ணிக்கையை அமைதியாகவும், சுமுகமாகவும் மேற்கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அது கூறியுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் வாக்கு எண்ணிக்கை மேற்கொள்வதற்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அங்கு மூன்று கட்டங்களாக நடத்தப்பட்ட சட்டப்பேரவை தேர்தலில் 63 புள்ளி எட்டு எட்டு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

ஹரியானாவில் நேற்று நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் 67 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<<<>>>>>>>>>>

உலகம் முழுவதற்கும் செமி கண்டக்டர் உற்பத்தி மையமாக இந்தியா எதிர்காலத்தில் திகழும் என்று மத்திய மின்னணு மற்றும தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், அடுத்த ஆண்டின் முதல் பகுதியில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட **Chip** வெளியிடப்படும் என்று தெரிவித்தார்.

அஸ்ஸாமில் டாடா நிறுவனத்தின் மூலம் இதற்கான ஒரு மையம் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், இந்தியாவில் **Chip** உற்பத்திக்கான முதலீடுகள் அதிக அளவில் எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக, சாதாரண மக்களும் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டில், 64 பில்லியன் டாலர் அளவிற்கு செமி கண்டக்டர் உற்பத்தி சந்தை உயரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் கூறினார்

<<<<<<<<<>>>>>>>>>>

உலக மூளைவளர்ச்சி குறை தடுப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மத்திய அரசின் மாற்றுத் திறனாளிகளை அதிகாரப்படுத்தும் துறை, இன்று நாடுமுழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்நாளையொட்டி, மூளை வளர்ச்சி குறைபாடு தொடர்பாக மக்கள் மத்தியில் நிலவும் மூட நம்பிக்கைகளை களையும் விதமாக இந்நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

மனவளர்ச்சி குன்றியவர்கள் மாற்றுத் திறனாளிகள் என்ற அடிப்படையில் அவர்களுக்கான திறமைகளை கண்டறிந்து அதனை ஊக்கப்படுத்துவதற்கு வழிவகுக்க வேண்டும் என்று உலக மூளை வளர்ச்சி குன்றியோர் நல சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வகை மாற்றுத் திறனாளிகளை ஊக்கப்படுத்தும் விதமாக, அவர்களது திறமைகளை பாராட்டி, நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

அவர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டால், அவர்களது நிலைமை மாறும் என்றும், அவர்களது தனித்துவம் வெளிப்படும் என்றும் இயன்முறை மருத்துவர் புண்ணியகோடி தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - புண்ணியகோடி 50 செகண்ட்ஸ்)

<<<<<<<<<>>>>>>>>>>

மஹாராஷ்ட்ரா மாநிலம், மும்பையின் செம்பூர் பகுதியில் இன்று காலை ஏற்பட்ட தீ விபத்தில் 3 குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

இரண்டு அடுக்குகள் கொண்ட கட்டிடத்தில் மின்பழுது காரணமாக இந்த தீவிபத்து ஏற்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில காவல்துறை கூறியுள்ளது.

**<<<<<<<<>>>>>>>>>>**

இஸ்ரேல் போர் விமானங்கள், லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நேற்றிரவு தாக்குதல் நடத்தின.

இந்த தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் பெரும்பாலான ராணுவத் தளவாடங்கள் வைக்கப்பட்டுள்ள இடங்கள் அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நேத்தன் யாஹூ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், லெபனான் எல்லைப்பகுதியில் செயல்படும் சுரங்கப்பாதை தகர்க்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதற்கிடையே, பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன், மேற்காசியாவில் அரசியல் ரீதியான தீர்வு ஏற்பட வழிவகை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

**<<<<<<<<>>>>>>>>>>**

ஹங்கேரியில் நடைபெற்று வரும் உலக சேலஞ்ச் கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியின் இறுதியாட்டத்திற்கு இந்திய வீரர் யோகேஸ்வர் முன்னேறியுள்ளார்.

ஆடவர் **Parallel Bar** மற்றும் **Horizontal Bar** பிரிவில் அவர் இறுதியாட்டத்தில் பங்கேற்கும் எட்டு பேரில் ஒருவராக தேர்வாகியுள்ளார்.

**<<<<<<<<>>>>>>>>>>**

காத்மாண்டுவில் நடைபெற்ற ஆசிய **Rugby** சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

நேற்று நடைபெற்ற மகளிர் பிரிவு இறுதியாட்டத்தில் ஃபிலிப்பைன்ஸ் அணியிடம் 5-7 என்ற கணக்கில் இந்திய அணி தோல்வியடைந்தது.

<<<<<<<<>>>>>>>>>>

உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் 3.30 மணிக்கு தொடங்குகிறது.

மற்றொரு போட்டியில் ஸ்காட்லாந்து – வெஸ்ட் இண்டீஸ் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இந்திய நேரப்படி இன்றிரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

<<<<<<<<>>>>>>>>>>

இந்தியா – பங்களாதேஷ் இடையேயான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று குவாலியரில் நடைபெறுகிறது.

<<<<<<<<END>>>>>>>>>